# தீவிர முறையில் இரண்டு வரிசை முறையில் கறவை மாடு வளர்ப்பு

முனைவர். ம.அ.வெண்ணிலா, முனைவர்.இரா. தங்கதுரை மற்றும் பா.ச. சண்முகம்

கால்நடை வளர்ப்புத் தொழில் விவசாயத்தோடு இணைந்த ஒரு முக்கிய தொழிலாகும் இதனை விவசாயிகள் சிறிய அளவில் செய்து வருகின்றனர். சிலர் இதனை ஒரு முக்கிய பிரதான தொழிலாகவே செய்து வருகின்றனர் இந்த கறவை மாடு வளர்ப்பில் வெற்றி கண்ட விவசாயி திரு. சம்பத் அவர்கள் தருமபுரி மாவட்டம், மாரவாடி அஞ்சல், ஏத்தப்பன்கொட்டாய் கிராமத்தைச் சார்ந்தவர். இவர் இத்தொழிலை சுமார் 10 வருடங்களாக செய்து வருகின்றார். முதலில் தன் நண்பர்களின் மூலம் இத்தொழிலைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு ஒரு மாடு வாங்கி வளர்த்து வந்தார். பிறகு சிறிது சிறிதாக தனது பண்ணை கால்நடைகளின் எண்ணிக்கையை பெருக்கினார். தற்போது இவரிடம் 10 மாடுகள் உள்ளது

**இனம்** : ஜெர்சி மற்றும் எச்.எப் இனக் கறவை மாடுகள் வைத்துள்ளார். வெவ்வேறு வயதுடைய கறவை மாடுகள் வைத்துள்ளார். இதனால் ஆண்டு முழுவதும் மாடுகள் கறவையில் இருந்து கொண்டே இருக்கும்.

ஒவ்வொரு மாடும் 285 வது நாளில் முதல் கன்று ஈன ஆரம்பிக்கும். அடுத்து 300 நாள்களுக்கு பால் உற்பத்தி இருக்கும். ஒவ்வொரு மாட்டிற்கும் 3 (அ) 4 வது மாதத்தில் செயற்கை முறையில் கருவூட்டப்படுகின்றது. கன்று ஈன்ற பிறகு இரண்டு மாதம் சினை இடைவெளிக்காலம் ஆகும். எனவே சராசரியாக தினமும் 6-7 மாடுகள் தினமும் பால் கறக்கும் நிலையில் இருக்கும். இதுவரையில் 10 கன்று வரை போட்ட மாடுகளையும் வைத்துள்ளார்.

**தீவன மேலாண்மை**

பசுந்தீவனத்திற்கு தன்னிடம் உள்ள 20 சென்ட் நிலத்தில் கோ, 4 வேலி மசால் மற்றும் சுபாபுல் ஆகிவற்றை வளர்த்து கொள்கிறார். இது சுமார் 3-4 மாடுகளுக்கான பசுந்தீவனத்தை கொடுக்கின்றது. மீதமுள்ள பசுந்திவனம் மற்றும் உலர் தீவனங்களை வெளியில் வாங்கி கொள்கிறார். இதை தவிர அடர் தீவனமாக SKM மாட்டுத்தீவனம் கொடுக்கின்றார். ஒரு நாளைக்கு ஒரு மாட்டுக்கு 6 கிலோ உலர் தீவனம், 30-35 கிலோ பசுந்திவனம் மற்றும் 5 கிலோ அடர்திவனம் தேவைப்படுகின்றது.

**தாது உப்பு**

தாது உப்புக் கலவை மாடு ஒன்றுக்கு ஒரு நாளைக்கு 40 கிராம் அளவு கொடுக்கப்படுகின்றது. இதன் மூலம் பாலில் கொழுப்பு சத்து மற்றும் கொழுப்பற்ற புரதம் (SNF) ஆகியவை அதிகமாகின்றது.

**நோய் மேலாண்மை**

மாடு கொட்டகை மற்றும் மாடுகளை நன்றாக பராமரிப்பு செய்வதால் எந்த விதமான நோயும் வருவதில்லை. மேலும் கோமாரி நோய்க்கான தடுப்பூசி வருடத்தில் இரண்டு முறை மார்ச் - ஏப்ரல் மற்றும் அக்டோபர் - நவம்பர் ஆகிய மாதங்களில் போடப்படுகின்றது.

**பால் விற்பனை**

தினமும் 90 விட்டர் வரை சராசரியாக பால் கிடைக்கின்றது. அதில் 75 லிட்டரை தருமபுரி டவுனில் உள்ள வீடுகளுக்கு ரூ30/லிட்டர் என்று விற்பனை செய்கின்றார். மீதமுள்ள 15 லிட்டரை ரூ25/லிட்டர் என்று ஹட்சன் கம்பெனிக்கு விற்பனை செய்கின்றார்.

**வரவு வெலவு**

| **விபரம்** | **செலவு (ரூ)** |
|---|---|
| கொட்டகை அமைக்க | 30000 /- |
| தீவன செலவு ரூ1200/ நாள் ஒன்றுக்கு (1200x300 நாட்களுக்கு) | 360000 /- |
| தாது உப்பு செலவு (நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் 300 நாட்களுக்கு ரூ. 165 விதம் 300x165) | 49500 /- |
| செயற்கை முறை கருவூட்டல் வருடம் இரு முறை மாடு ஒன்றுக்கு ரூ 75 / முறை 75x9x2 | 1350 /- |
| **மொத்தம்** | **413850 /-** |
| **வரவு** | |
| **பால்** | |
| நாள் ஒன்றுக்கு 90 லிட்டர் (75 லிட்டர் ரூ 30 க்கும்<br>15 லிட்டர் ரூ25 க்கும் விற்பனை செய்யப்படுகின்றது)<br>90 லிட்டர் x 300 நாட்களுக்கு = 27000 லிட்டர்<br>20250 லிட்டர் @ ரூ30 / லிட்டர்<br>6750 லிட்டர் ரூ ரூ25 / லிட்டர் | 607500 /-<br>168750 /- |
| **எருவிலிருந்து வருமானம்** | |
| மாதம் ஒரு லோடு வீதம் ஒரு வருடத்திற்கு 12 லோடு எரு @ ரூ.750 / லோடு வீதம் 12 x 750 | 9000 /- |
| **மொத்த வருமானம்** | **ரூ 785250 /-** |
| **நிகர இலாபம்** | **ரூ 371400 /-** |

எனவே கறவை மாடு வளர்ப்பின் மூலம் இவர் மாதத்திற்கு ரூ 30000/- வரை சம்பாதிக்கின்றார். இவர் பசுந்தீவனம் மற்றும் உலர்தீவனம் போன்றவற்றை விலைக்கு வாங்குவதால் தீவனச் செலவு உள்ளது. தனது சொந்த நிலத்திலேயே மொத்த தீவனமும் உற்பத்தி செய்யும் போது தீவன செலவும் குறைந்து வருமானம் அதிகமாகும் வாய்ப்பும் உள்ளது. எனவே இவரை பின்பற்றி மற்ற விவசாயிகளும் கறவை மாடு வளர்ப்புத் தொழிலை செய்து வருமானம் ஈட்டலாம். மேலும் இவர் வேலையாட்கள் யாரும் இல்லாமல் இவரும் இவரது மனைவி மட்டும் இதை கவனித்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**முகவரி**

திரு. சம்பத்
த/ பெ. வேடி
எத்தப்பன்கொட்டாய்
மாரவாடி அஞ்சல்
தருமபுரி மாவட்டம்
அலைபேசி எண் - 7708742270